

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நேற்று (13.09.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் மக்களுக்கான இ.சி.ஜி. பரிசோதனை மற்றும் சிகிச்சையினைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குனர் மரு.சோமசுந்தரம், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் மரு. சுகந்தி ராஜகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மண்டலக்குழுத் தலைவர் எஸ். நந்தகோபால், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.





செப்டம்பர் 15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் அன்று ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ”தமிழ்நாட்டின் மண் மொழி மானம் ஆகியவற்றை எந்நாளும் காப்பேன்! ஆதிக்கச் சக்திகளின் முன் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்! என்று உறுதிமொழி எடுப்பது தொடர்பாக ஆலோசிக்க நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா – க.தனசேகரன் – கே.கண்ணன் பங்கேற்பு!

# 137வது வட்ட ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் பி.கே.குமார் அறிக்கை!

சென்னை, செப்.14-

சென்னை தெற்கு மாவட்டம், மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் படி மூவேந்தர் தெரு, ராஜீவ் காந்தி நகர், நெசப்பாக்கத்தில் உள்ள வட்டக் கழக அலுவலகத்தில் இன்று (14.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணி அளவில் அவைத் தலைவர் ஆர்.செல்லையா தலைமையில், பகுதி செயலாளர் கே.கண்ணன் முன்னிலையில் 137வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

அதுபோது செப்டம்பர்-15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று 137வது வட்டத்தில் உள்ள 21 பாகங்களிலும் அண்ணாவின் திருவுருவப்படத்தை வைத்து, மரியாதை, செலுத்துவது மற்றும் செப்டம்பர்-17 முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது குறித்து சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே இந்த கூட்டத்தில் 137 வது வட்டத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் பி.கே.குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.



வயது முதிர்ந்த மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு, அவர்களது வீடு தேடிச் சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் “தாயுமானவர்” திட்டத்தைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.78, கொசப்பேட்டை, குட்டித் தெருவில் உள்ள பயனாளியின் வீட்டிற்குச் சென்று ரேஷன் பொருட்களை நேரடியாக வழங்கித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்!



பேரறிஞர் அண்ணா
காஞ்சித் தலைவனின்
பிறந்த நாள்
திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கு சிறந்த நாள்
பெரியார் வழிவந்தவரின்
பொன்னான நாள்
பேச்சால் ஈர்த்தவரின்
பெருமைமிகு நாள்
எளிமையாய் என்றும்
இருந்தவர் அண்ணா
இயல்பாய் அறிவார்ந்த
சிந்தனையாளர் அண்ணா
தரணியில் தனித்தன்மை பெற்றவர் அண்ணா
தமிழே மூச்சு என்று வாழ்ந்தவர் அண்ணா
திராவிட முன்னேற்ற கழகத்தின் வேரே அண்ணா
திறமையான பேச்சில் நிமிர்ந்தவர் அண்ணா
நூல்கள் பல படித்தவர் அண்ணா
நுணுக்கங்கள் தானாய் அறிந்தவர் அண்ணா
பக்குவமும் பண்பும் கொண்டவர் அண்ணா
பகுத்தறிவு கொள்கையை கடைபிடித்தவர் அண்ணா
சுய சிந்தனையோடு ஆற்றல் வளர்த்தவர் அண்ணா
சுயமரியாதையை
தன்னுள் இணைத்தவர் அண்ணா
தேசம் போற்ற உயர்ந்தவர் அண்ணா
தென்னாட்டு பெர்னாட்ஷாவானவர் அண்ணா
தமிழக முதல்வராய் முடி சூடியவர் அண்ணா
“தமிழ்நாடு” என்று பெயர் வைத்தவர் அண்ணா
காஞ்சிப் புத்தன் என அறியப்பட்டவர் அண்ணா
கடமை கண்ணியம் கட்டுப்பாடு உரைத்தவர் அண்ணா
நம் இதயம் தனில் அன்பால் நிறைந்திருப்பவர் அண்ணா
நாளும் புகழோடு வாழ்பவரே பேரறிஞர் அண்ணா

-முருக.சண்முகம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் –

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கின்றனர்!

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருமண விழா!

## மயிலை த.வேலு பங்கேற்பு! எஸ்.முரளி வேண்டுகோள்!

சென்னை, செப். 14-

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த வட்டக் கழக செயலாளர்கள் மற்றும்

கழக நிர்வாகிகள் கவனத்திற்கு மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழக அரசின் இந்து அறநிலையத்துறை சார்பில் திருமண விழாவினை இன்று (14.09.2025 -ஞாயிற்றுக்கிழமை), காலை 8.30 மணி, கபாலி கற்பகாம்பாள் திருமண மண்டபம், ஆர்.ஏ.புரத்தில் சென்னை-28 தலைமை ஏற்று நடத்தி வைக்க வைக்க வருகை தரும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள், சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ., மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பி னர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ் முரளி கேட்டுக் கொண்டுள்ளார்.

மயிலை த.வேலு – நந்தனம் கி.மதி முன்னிலை! பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

# 123வது வட்டத்தில் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தி உறுதிமொழி ஏற்பு!

## வட்டக் கழகச் செயலாளர் மு.இ.ஏழுமலை அறிக்கை!

சென்னை, செப். 14-

கழகத் தலைவர் தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க பகுத்தறிவு பகலவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் போற்றும் வகையில் நாளை (15.9.2025) 123 வது வட்டம் முழுவதும் திருவுருவ படம் வைத்து மலர் அஞ்சலி செலுத்தி அறுசுவை உணவு வழங்கியும் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு எம்.எல்.ஏ. மேற்கு பகுதி செயலாளர் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி. மதி எம்.சி. முன்னிலையில் 123வது வட்ட கழகம் உட்பட்ட தெருக்களில் திருவுருவப்படம் வைத்து மலர் தூவி நம் மண் மானம் இனம் காக்க உறுதிமொழி எடுத்திட வேண்டும் என வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை கேட்டுக் கொண்டுள்ளார்.

தெருக்கள் இடம்: சி.பி. ராமசாமி தெரு, டி.டி.கே. சாலை, திருவள்ளுவர் சாலை, வன்னியபுரம், பக்தவச்சலம் தெரு, பாரதியார் தெரு, அப்பாதுரை தெரு, வ உ சி தெரு சந்திப்பு திருவள்ளூர் சாலை, சித்தம்மாள் ரோடு சந்திப்பு திருவள்ளூர் சாலை, எல்டாமிஸ் ரோடு, ராமலிங்கேஸ்வரர் கோவில் தெரு, காமராஜர் சாலை எல்.ராம்ஸ் ரோடு சந்திப்பு, ஜெகநாதன் தோட்டம் எல்லாம் ரோடு சந்திப்பு, பெரியார் சாலை, காமராஜர் 1 வது தெரு, காமராஜர் 2 வது தெரு, வெங்கட்ராமன் தெரு, பெரியார் சாலை வெங்கட்ராமன் தெரு சந்திப்பு, வெங்கட்ராமன் தெரு அன்பகம் எதிரில், பிமன்னா பிரதான சாலை 1 வது தெரு, பிமன்னா 2 வது தெரு, டாக்டர் ரங்கா ரோடு சந்திப்பு, சென்மேரிஸ் ரோடு கால்வால்கரை சாலை சந்திப்பு, கால்வாய் கரை சாலை, கவிஞர் பாரதிதாசன் சாலை.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வட்டச் செயலாளர் இரா.குமாரசாமி ஏற்பாட்டில்

# 186 அ வட்டத்தில் கழகத்தினருக்கு பரிசுப் பொருட்கள்!

## ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. – எஸ்.வி.ரவிச்சந்திரன் வழங்கினர்!

சென்னை, செப். 14

சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 186 (அ ) வட்டத்தில் திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா. சுப்ரமணியன் அறிவுறுத்தல் படியும் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை உறுதுணையாக இருந்த வட்டக் கழகத்தை சேர்ந்த BLA2,BDA யை நிர்வாகிகளுக்கு பரிசு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி வட்டக் கழக செயலாளர் இரா.குமாரசாமி ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எஸ். அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் பெருங்குடி எஸ். வி. ரவிச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பரிசு பொருட்களை வழங்கினர் . அதனைத் தொடர்ந்து வந்த அனைவருக்கும் அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜே. கே. மணிகண்டன் எம்.சி. கழகம் முன்னோடிகள் கழக நிர்வாகிகள், தே ஜமுலிங்கம், ஈ லட்சுமணன், ஆர் ஜனாதனன், எஸ் வெங்கடேசன், எஸ் லீலாவதி, ஜே. மகேஸ்வரன், எஸ் கோடீஸ்வரன், எம் அரசு, அலுவலகம் எஸ் ஜெய்சிங், செந்தமிழ் செல்வன், எஸ் வசுமதி, உள்ளிட்ட மகளிர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்





சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் நேற்று (13.9.2025) காலை கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஜாக் ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு கழக உறுப்பினர் சேர்க்கை, 2026ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தல் களப் பணிகள், கரூரில் செப்டம்பர் 17 அன்று நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளல் ஆகியவற்றை விரிவாக எடுத்துரைத்து பேசினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், மாவட்ட / மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.கிட்டு (எ) கிருஷ்ணன்

**செப்டம்பர் 14 (2017)**



திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றிவர்.

1957ல் பேராசிரியர் அன்பழகனார் அவர்களைஅழைத்து வந்து அம்மாபேட்டை கிளைக் கழகத்தை உருவாக்கி அப்பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.


கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.எஸ்.ராஜபூசனம்

**செப்டம்பர் 13 (2021)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தின் இணைந்து பணியாற்றியவர்.

சென்னை, ஆயிரம்விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

42 ஆண்டுகாலமாக இராசாங்கம் நினைவு மன்றத்தின் தலைவராக பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்தவர்.

வருமானவரித் துறை ஊழியர் கூட்டமைப்பின் தலைவர், தமிழ்நாடு தொழிற்சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.